ஜவ்வாது மலையில் உள்ள கோவிலூர் கிராமத்தில் புராதன கோயிலைப் புதுப்பித்தல்.

* 4425 திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், ஜவ்வாது மலையில் உள்ள கோவிலூர் கிராமத்தில் புராதனக் கோயில் அழிந்துள்ள நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஜவ்வாது மலையில் உள்ள கோவிலூர் கிராமத்தில் அமைந்துள்ள இப் புராதன திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய இந்துசமய அறநிலையத்துறை ஆணையரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாவட்டம் ஒன்றாக இருந்த நேரத்தில் கேட்கப்பட்ட கேள்வியாகும். இன்று திருவண்ணா மலை-சம்புவராயர் மாவட்டத்தில் கலசப்பாக்கம் தொகுதியில் இந்த கோவிலூர் புராதனக் கோயில் அமைந்திருக்கிறது. அது சோழப் பேரரசர்களால் கட்டப்பட்ட கோயில் என்றும் அங்கே சொல்லப்படுகிறது. அதில் விரைவான நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா? அதற்காக தற்சமயம் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் என்ன என்பதை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இது புராதன திருக்கோயில், மிகப் பாழ்பட்ட நிலையில் இருக்கிறது. இங்கே நுழைவாயில், முகப்பு, மதிற்சுவர், கர்ப்பக் கிரகம், விமானம் போன்ற பல பணிகள் செய்ய வேண்டி இருக்கிறது. ஆணையர் அங்கேயிருக்கக்கூடிய உதவிப் பொறி யாளரை, இதற்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோயிலில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அதைத் தற்சமயம் நம்மைப் போன்றவர்கள் படிக்க முடியாத ஒரு நிலையிலிருக்கிறது. எனவே நம்முடைய

1990 ஆகஸ்ட் 21]

அறநிலையத் துறையின் மூலமாக, அந்தக் கல்வெட்டுக்களில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றன என்பதையும் அரசு ஆய்ந்து அறிவிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கல்வெட்டுக்களிலே என்ன இருக்கின்றன என்பதை ஆய்ந்து சொல்வதற்கு வேலூரில் இருக்கும் தொல்பொருள் துறையினரிடம் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, களப்பிரர் கள் அங்கே படையெடுத்ததன் காரணமாக பல்லவ நாட்டில் வாழ்ந்த மக்கள், குறிப்பாக ராஜ குடும்பம், ஜவ்வாது மலையில் தான் தஞ்சம் புகுந்தது என்று வரலாறு கூறுகிறது. அவர்கள் காலத்தில் புராதனமான பல கோயில்கள் கட்டப்பட்டிருக் கின்றன. கோவிலூர் கோயில் மட்டுமல்லாமல், நெல்லி வாசலிலே இருக்கின்ற பகவதி கோயில் மிகப் பிரசித்தி பெற்ற ஒரு கோயிலாகும். அதே நேரத்தில் மலைரெட்டியூர் என்ற ஊரிலுள்ள செல்ராயன் என்ற கோயில் அதைவிடப் பிரசித்தி பெற்ற கோயிலாகும். பொதுவாக ஜவ்வாது மலையில் பல புராதனக் கோயில்கள் பல்லவர்களால் கட்டப்பட்டன என்பது வரலாறு. எனவே அந்தக் கோயில்களை எல்லாம் ஆய்வு செய்து, அவைகளில் திருப்பணி செய்வதற்கு அரசு ஒரு பொது நடவடிக்கையாக, 'காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம்' மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஜவ்வாது மலை மட்டுமல்ல. தமிழகம் முழு வதிலும் இருக்கக்கூடிய, அப்போதுள்ள மன்னர்களால் கட்டப் பட்டு, இன்றைக்குப் பாழ்பட்டிருக்கக்கூடிய நிலையில் பல திருக்கோயில்கள் இருக்கின்றன. நிதிநிலைக்கேற்ப எந்தெந்த கோயில்களை எடுக்கவேண்டுமோ, அவைகளை எடுத்து, திருப்பணிகள் செய்யப்படும்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்ட வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் கூலி.

* 8050 திரு. எம். கே. கரீம் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டத்தில் தனியார் தேயிலைத் தோட்டங் களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் கூலியைப் போல், தமிழ்நாடு தேயிலைத் தோட்ட வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?